# மூன்றாம் கூடுதல் மாவட்ட/அமர்வு நீதிமன்றம், சேலம்

முன்னிலை - திரு.வே.புகழேந்தி, இளநிலைச் சட்டம்,
மாவட்ட நீதிபதி

**2026–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 04–ஆம் நாள் புதன்கிழமை**

**திருவள்ளுவர் ஆண்டு 2057 தைத் திங்கள் 21–ஆம் நாள்**

**முதலேற்பு வழக்கு எண்.78/2013 –இல்**
**வழக்கிடை விண்ணப்ப எண் 10/2026,**
**வழக்கிடை விண்ணப்ப எண் 11/2026,**
**வழக்கிடை விண்ணப்ப எண் 12/2026**

**01. இந்திராணி**
**02. அமுதவள்ளி**
**03. புஷ்பா**
**04. வளர்மதி** …மனுதாரர்கள்/வாதிகள்

**–எதிர்–**

**01. E. மாரிமுத்து**
**02. மோகன்ராஜ்**
**03. முருகன்**
**04. சரோஜா**
**05. K. வைரவேல்**
**06. P. செந்தில்நாதன்**
**07. P. சங்கர்** …எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்.

இம் மூன்று மனுக்களிலும் மனுதாரர்களுக்காக வழக்குரைஞர் **திரு A.விஸ்வநாதன்** அவர்களும் 03-ஆம் எதிர்மனுதாரருக்காக வழக்குரைஞர் **திரு S. அனந்தகிருஷ்ணன்**அவர்களும் தோன்றினர். இம்மூன்று மனுக்களும் இன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது இரு தரப்பினரும் முன்வைத்த வாதங்களை கவனத்தில் வைத்தும் வழக்குக் கோப்புகளை பரிசீலித்தும் இந் நாள்வரை நிலுவையிலிருந்த இந்த மனுக்களில் இன்று இந் நீதிமன்றம் ஆணை பிறப்பிக்கிறது.

## பொதுவான ஆணையுரை

இரு தரப்பு சாட்சியமும் முடிவுற்று இரு தரப்பு விவாத்திற்காக வழக்கு நிலுவையில் இருந்தபோது வாதி தரப்பு சாட்சித்தை மீண்டும் திறந்து வாதி தரப்பு 01-ஆம் சான்றாளரை மீண்டும் அழைத்து வாதி தரப்பில்

IIIrd ADJ Court, Salem

முன்னிடும் வழக்குரையுடன் தாக்கல்செய்யப்படாத ஆவணங்களை ஏற்றுக் -கொண்டு வாதி தரப்பு 01-ஆம் சான்றாளரை கூடுதல் சாட்சியம் அளிக்க அனுமதி வழங்கக் கோரி இம் மூன்று மனுக்களும் முறையே உரிமையியல் நடைமுறைத் தொகுப்புச் சட்டத்தின் 151-ஆம் பிரிவு, 18-ஆம் வகுமுறை யின் 17-ஆம் விதி, 07-ஆம் வகுமுறையின் 14(1)-ஆம் விதி ஆகிய வகையங்களின்கீழ் தாக்கல்செய்யப்பட்டுள்ளன.

## மனுக்களின் சுருக்கம்

01. மனுதாரர்கள் முதலேற்பு வழக்கின் வாதிகள் ஆவர். வழக்குச் சொத்தில் பாகப்பிரிவினை கோரியும் வழக்குச் சொத்தில் வில்லங்கத்தை ஏற்படுத்திய ஆவணங்கள் சம்மந்தமாக விளம்புகை நிவாரணங் கோரியும் இதர நிவாரணங்கள் கோரியும் மனுதாரர்கள்/வாதிகள் முதலேற்பு வழக்கைத் தொடுத்துள்ளனர்.

02. வழக்குத் தொடுக்கப்பட்டபோது மனுதாரர்கள்/வாதிகள் வசம் என்னென்ன ஆவணங்கள் இருந்தனவோ அவற்றை வழக்குரையுடன் தாக்கல்செய்துவிட்டனர். தற்போதுதான் சில ஆவணங்கள் கிடைத்தன. அந்த ஆவணங்களை நீதிமன்றத்தில் பரிசீலனைக்கு தாக்கல்செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது. அந்த ஆவணங்கள் வழக்கிலுள்ள பிரச்சனையை முடிவுசெய்ய உதவியாக இருக்கும். ஆகையால், அவற்றை வாதி தரப்புச் சான்றாவணங்களாக குறியீடுச்செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது. அந் நோக்கத்திற்காக வாதிகள் தரப்பு சாட்சியத்தை மீண்டும் திறந்து வாதிகள் தரப்பு 01-ஆம் சான்றாளரை மீண்டும் அழைத்துக் கூடுதல் ஆவணங்களை குறியீடுச் செய்ய அனுமதியளித்து ஆணையிட வேண்டும்.

III rd ADJ Court, Salem

## எதிருரைகளின் சுருக்கம்

**03.** இந்த வழக்கில் இரு தரப்பு சான்றுகளும் பதிவுசெய்யப்பட்டபின் இரு தரப்பு வாதத்திற்காக வழக்கு உள்ளது. எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வாதி தரப்புச் சான்றாளர்களை குறுக்குவிசாரணை செய்தும் பிரதிவாதிகள் தரப்புச் சான்றுகளை முன்னிட்டும் முன்வைத்த எதிர்வாதத்தை வீழ்த்தும் விதத்தில் கூடுதல் சான்றுகளை முன்னிட வேண்டும் என்ற கோரி மனுதாரர்கள் இந்த மனுவை தாக்கல்செய்துள்ளனர். இந்த மனுவுடன் தாக்கல் செய்யப்படும் ஆவணங்கள் முதலேற்பு வழக்கை முடிவுசெய்ய தொடர்பற்றவை. காலதாமதமாக ஆவணங்களை தாக்கல்செய்ய மனுவில் சொல்லப்பட்டுள்ள காரணங்கள் பொய். வழக்கை முடிக்க விடாமல் தடுக்க வேண்டும் என்ற நோக்கத்தில் மனுதாரர்கள்/வாதிகள் இந்த மனுக்களை தாக்கல்செய்துள்ளார்கள். ஆகையால், இந்த மனுக்களை தள்ளுபடிச் செய்ய வேண்டும்.

## தீர்வுகாண வேண்டிய விவாதக்கூறுகள்

03. **இம் மூன்று மனுக்களும் அனுமதிக்கத்தக்கனவா?**

## தீர்முடிவு

**04.** இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்குக் கோப்புகள் ஓர்வுசெய்யப்பட்டன. இந்த வழக்கில் இரு தரப்பு சாட்சியங்களும் முடிவுற்று 23.01.2026-ஆம் தேதியன்று இரு தரப்பு வாதத்திற்காக வழக்கு இருந்த நிலையில் இம் மூன்று மனுக்களையும் மனுதாரர்கள்/வாதிகள் தாக்கல் செய்துள்ளார்கள். இம் மூன்று மனுக்களிலும் வழக்கின் தற்போதைய நிலை என்ன என்று குறிப்பிடாமலேயே இம்மூன்று மனுக்களையும் வாதிகள்



III rd ADJ Court, Salem

தாக்கல்செய்துள்ளனர். இம் மூன்று மனுக்களும் வெறும் சம்பிரய முறையில் தாக்கல்செய்யபப்பட்டிருப்பதாக இந் நீதிமன்றம் கருதுகிறது.

05. மனுதாரர்கள்/வாதிகள் தற்போது தாக்கல்செய்ய முனையும் கூடுதல் ஆவணங்களை எதிர்வழக்குரையில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் சொல்லி ஒப்புக்கொண்டுள்ளனர். அந்த ஆவணங்களை தற்போது தாக்கல் செய்ய அனுமதி வழங்குவதால் எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகளுக்கு எவ்வித அநீதியும் விளையாது. பல்முனை வழக்கு நடவடிக்கைகளை தவிர்க்க இந்த மூன்று மனுக்களையும் அனுமதிப்பது உகந்தது என்று இந் நீதிமன்றம் கருதுகிறது.

06. இருப்பினும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு தாமதத்தால் ஏற்பட்ட இன்னலை ஈடுசெய்ய இந்த மூன்று மனுக்கள்மீதும் மொத்தமாக 3,000/- உரூபாயை செலவுத்தொகையாக மனுதாரர்கள்/வாதிகள் செலுத்த வேண்டும் என்ற நிபந்தனை விதிப்பது உகந்தது என்று இந் நீதிமன்றம் முடிவுசெய்கிறது.

## இறுதிமுடிவு

07. இறுதியாக, எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகளுக்கு மனுதாரர்கள்/ வாதிகள் இம் மூன்று மனுக்கள்மீதும் மொத்தமாக 3,000/- உரூபாயை 13.02.2026-ஆம் தேதியன்றுக்குள் செலவுத்தொகையாக கொடுக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் இம்மூன்று மனுக்களும் அனுமதிக்கப்படுகின்றன. தவறினால் இம்மூன்று மனுக்களும் தள்ளுபடிச் செய்யப்படும்.

இந்த ஆணையுரை என்னால் சுருக்கெழுத்துத் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சுச் செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 09–ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

PUGAZHENTHI V Digitally signed by PUGAZHENTHI V
Date: 2026.02.09 18:11:39 +0530

மூன்றாம் கூடுதல் மாவட்ட/அமர்வு நீதிபதி,
சேலம்.

**இணைப்பு:–** இல்லை

III rd ADJ Court, Salem